In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

உன்னதபுரீச்வர மாஹாத்மியம்

(மிலட்டூர் ஸ்தலபுராணம்)

தமிழ்ச் சுருக்கம்

ஆக்கியோன் :

முனைவர். தி. கணேசன்

வெளியீடு :

ஸ்ரீ துர்கா ஆய்வு நிறுவனம்

நயினாரகரம், தென்காசி.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உன்னதபுரீச்வரமாஹாத்மியம்

(மிலட்டூர் ஸ்தலபுராணம்)

தமிழ்ச் சுருக்கம்

ஆக்கியோன் :

முனைவர். தி. கணேசன்

சைவசித்தாந்தம் மற்றும் சைவாகம ஆராய்ச்சியாளர்,
பிரெஞ்ச் இந்திய ஆராய்ச்சி நிறுவனம்
(FRENCH INSTITUTE)
பாண்டிச்சேரி.

வெளியீடு :

ஸ்ரீ துர்கா ஆய்வு நிறுவனம்

நயினாரகரம், தென்காசி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூல் விளக்கக் குறிப்பு

நூல் பெயர்	:	உன்னதபுரீச்வரமாஹாத்மியம்
தொகுப்பு ஆசிரியர்	:	முனைவர். தி. கணேசன்
பொருள்	:	மிலட்டூர் ஸ்தலபுராணம்
மொழி	:	தமிழ்
எழுத்து	:	தமிழ்
எழுத்தளவு	:	12 புள்ளிகள்
அளவு	:	1/8 size
தாள்	:	மேப்லித்தோ இயற்கைவண்ணம்
பக்கம்	:	24
முதல் பதிப்பு	:	2009
வெளியீடு கணினி வடிவமைப்பு : அச்சிட்டோர்		ஸ்ரீ துர்கா ஆய்வு நிறுவனம், நயினாரகரம், தென்காசி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ உள்ளதுறீச்வரர்

ஸ்ரீ சிவபரியாம்பாள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்னுரை

நமது பாரதநாட்டின் ஆணிவேராகத் திகழும் ஆன்மீக வாழ்விற்குத் துணை செய்வன கோயில்களும், புண்ணியத் தலங்களும் புண்ணிய நதிகளுமாம். கணக்கற்ற நதிகளுள் சில நதிகள் மிகப் பண்டைய காலத்திலிருந்தே முனிவர்களாலும், மக்களாலும் பெரிதும் போற்றி வணங்கப்பட்டுவருகின்றன. இப்புண்ணிய நதிகளின் கரைகளில் கணக்கற்ற சிவ க்ஷேத்திரங்கள் அமைந்துள்ளன. முனிவர்களும், தேவர்களும் அத்தலங்களில் சிவலிங்கங்களைத் தாபித்து வழிபட்டு வந்துள்ளனர். பல க்ஷேத்திரங்களில் சிவபெருமான் சுயமாகவே தோன்றி மக்கள் அனைவருக்கும் அருள் பாலித்து வருவதையும் நாம் அறிகிறோம். அப்படிப்பட்ட புண்ணியத் தலங்களின் அரிய பெருமைகளை மக்களுக்கு விளக்குவன ஸ்தலபுராணங்கள். இந்நூல்கள் பெரும்பான்மை மற்றபுராணங்களின் ஒரு பகுதியாக அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக ஹாலாஸ்யமாஹாத்மியம், அருணாசல மாஹாத்மியம், விருத்தாசலமாஹாத்மியம், காசீகண்டம், சுவேதாரண்ய மாஹாத்மியம் முதலிய பல ஸ்தலபுராணங்கள் சிவபுராணம், பிரஹ்மாண்ட புராணம், ஸ்கந்தபுராணம் முதலிய மஹாபுராணங்களின் பகுதிகளாக உள்ளன. வடமொழியில் அமைந்துள்ள இந்த ஸ்தலபுராணங்கள் தமிழ் முதலான பிராந்திய மொழிகளிலும் மிகப் பழங்காலந்தொட்டே மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

தலபுராண இலக்கியங்கள்

தமிழ் மொழியில் இவ்வகையான பல தலபுராணங்கள் மொழிபெயர்க்கப்பட்டு, மக்களிடையேயும், புலவர்களிடையேயும் நன்கு பயிலப்பட்டு வந்திருக்கின்றன. தலபுராணத்தை ஒரு தனி இலக்கியமாகவே அமைத்து வளர்த்த பெருமை தமிழ்நாட்டையே சாரும். தேவாரம், திருவாசகம், பெரியபுராணம் முதலான சைவநூல்களுக்கு அடுத்தபடியாக இத்தலபுராணங்கள் சைவ மக்களிடையே மிக்க பக்தியுடன் நெடுங்காலமாகப் பெரிதும் போற்றப்பட்டு வருகின்றன. தலபுராணங்கக்களுள் அதிகமாகப் போற்றப்படுபவை சிவத்தலங்களே; பெரும்பாலான சிவத்தலங்களுக்கு வடமொழியில் தனித்தனியே ஸ்தலமாஹாத்மியங்கள் உள்ளன. அவற்றுள் சில நூல்களே பதிப்பிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, ஹாலாஸ்யமாஹாத்மியம், சிதம்பரமாஹாத்மியம், வேதாரண்ய மாஹாத்மியம், ச்யுதபுரி (வழுவூர்) மாஹாத்மியம் முதலியன. எஞ்சியவற்றுள் பல அச்சேற்றப்படாமல் சுவடிகளாகவே உள்ளன, பல அழிந்தும் போயின.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தலபுராண ஆசிரியர்கள்

தமிழ் மொழியில் இன்று கிடைத்துள்ளவற்றுள் காலத்தால் பழமையானது நம்பிதிருவிளையாடல் எனப் பெரிதும் போற்றப்படும் திருவிளையாடற் புராணம். இது ஹாலாஸ்யமாஹாத்மியத்தைத் தழுவித் தமிழில் இயற்றப்பட்ட ஒரு மிகச் சிறந்த காப்பியமாகும். 13 ம் நூற்றாண்டில் மதுரையில் வாழ்ந்த பெரும்பற்றப்புலியூர்நம்பி என்னும் சோழியபிராமணரால் இயற்றப்பட்ட இக்காப்பியம் மதுரைச் சொக்கநாதப்பெருமானின் 64 திருவிளையாடல்களை விளக்குகிறது. அடுத்தது, 14 ம் நூற்றாண்டில் சிதம்பரமாஹாத்மியத்தைத் தழுவி தில்லையில் வாழ்ந்த உமாபதிசிவாசாரியார் இயற்றிய கோயிற்புராணம். பின்னர், 16 ம் நூற்றாண்டில் தில்லையில் வாழ்ந்த மிகப் புகழ்பெற்ற சைவ ஆசாரியரான மறைஞானசம்பந்தர் இயற்றிய கமலாலயச்சிறப்பு என்னும் திருவாரூர்த் தலபுராணமும், அருணாசலபுராணமுமாகும். அதைத் தொடர்ந்து நிரம்பஅழகியதேசிகர், சைவ எல்லப்பநாவலர், ஞானவரோதயர் போன்றோர் பல தலபுராணநூல்களைத் தமிழில் இயற்றியுள்ளனர்.

19 ம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகப் புகழ்வாய்ந்த தமிழ்ப் புலவரும் தமிழ்த் தாத்தா என அன்புடன் அழைக்கப்படும் மஹாமஹோபாத்தியாய உ. வே. சாமிநாதையர் போன்ற ஒப்பற்ற தமிழ்ப் புலவர்களை உருவாக்கியவருமான மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பல சிவத்தலங்களுக்கு அவ்வத்தலங்களின் வடமொழி ஸ்தலபுராணங்களின் கருத்துக்களை நன்கு அறிந்து தமிழில் தலபுராணங்களை இயற்றியுள்ளனர். அவற்றில் பெரும்பான்மை அச்சாகியுள்ளன.

வடமொழியிலமைந்த ஸ்தலபுராணங்களும் அவ்வப்போது புத்தகவடிவில் வெளியாகியுள்ளன. ஆனால் இன்னும் வெளிவராமல் சுவடியிலேயே இருப்பவை பல ஸ்தலபுராணங்கள். அந்த வரிசையில் மிலட்டூர் என்று அழைக்கப்படும் இந்த சிவஸ்தலத்தின் பெருமைகளை எடுத்துரைக்கும் உன்னதபுரீச்வரஸ்தலமாஹாத்மியம் என்னும் இந்த ஸ்தலபுராணம் இது நாள் வரை அச்சேற்றப்படாமல் கையெழுத்துப் பிரதியாகவே உள்ளது. இந்நூல் விரைவில் புத்தகவடிவில் அச்சாக உள்ளது. இதுவரை கிடைத்துள்ள கையெழுத்துப் பிரதிகள் சொற்பிழைகளும் எழுத்துப் பிழைகளும் நிறைந்துள்ளதால் பல இடங்களில் பொருள் விளக்கம் கடினமாக உள்ளது. என் அறிவுக்கு எட்டியவரை இப்புராணத்தின் சுருக்கத்தைக் கீழ்க் கண்டவாறு கூறுகிறேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மிலட்டூர் ஸ்தலபுராணச் சுருக்கம்

(உன்னதபுரீச்வரஸ்தலமாஹாத்மியம்)

அத்தியாயம் 1

இந்நூல் பன்னிரண்டு அத்தியாயங்களைக் கொண்டது. முதன்முதலில் பிரஹ்மா நாரதமஹர்ஷிக்கு இப்புராணத்தை உபதேசித்தார். நைமிசாரண்யத்தில் ஸத்ரம் என்னும் மிகப் பெரிய யாகத்தின் முடிவில் கூடியிருந்த காச்யபர், கபிலர், வஸிஷ்டர், வாமதேவர் முதலான சிவபக்தியிற் சிறந்தவர்களும், சிவதியானத்திலேயே வாழ்க்கையைக் கழிப்பவர்களும், திருநீறு, உருத்திராக்ஷம் முதலிய சிவசின்னங்களை எப்போதும் அணிந்திருப்பவர்களுமாகிய பல ரிஷிகளைக் காண வியாஸமுனிவரின் தலைசிறந்த சீடரான ஸூதர் என்னும் மஹர்ஷி வருகிறார். அம்முனிவர்கள், பிரஹ்மாண்டபுராணமென்னும் மிகப் பெரியதொரு புராணத்தின் ஒரு பகுதியாயுள்ளதும், உன்னதபுரீச்வரஸ்தலத்தின் பெருமைகளை விளக்குவதாயும் உள்ள இப்புராணத்தை ஸூதமுனிவர் வாயிலாகத் தாங்கள் கேட்பதற்கு மிக்க ஆவல் உடையவர்களாய் இருத்தலைத் தெரிவிக்கின்றார்கள். அம்முனிவர் பெருமானும் மிகுந்த மகிழ்ச்சியுடன் உன்னதபுரீச்வரம் எனப்படுவதும் தமிழ்மொழியில் மிலட்டூர் என்று அழைக்கப்படுவதுமான இத்தலத்தின் பெருமைகளை விளக்கும் புராணத்தை அம்முனிவர்களுக்கு உபதேசிக்கிறார்.

பரந்து விரிந்த இப்பாரததேசத்தில் சுவர்க்கத்திற்கு நிகரானதும், காவேரி என்னும் புண்ணியநதி பாய்ந்து வளம் செழித்து விளங்குவதும் எல்லாச் செல்வங்களும் நிறைந்ததுமான சோழநாடு விளங்குகிறது. யோகிகளும், ஸநகர் முதலான முனிவர்களும், மற்றும் கந்தர்வர்களும் எப்போதும் அங்கு வருகை புரிகின்றனர். துவாபரயுகத்தில் அந்நாட்டில் புரவல்லம் எனும் ஊரில் கல்மாஷபாதன் என்னும் ஓர் அரசன் தர்மத்தினின்றும் வழுவாது சிறந்த முறையில் அரசாண்டு வந்தான். அவன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கல்வியிலும், வேதங்களைக் கற்றோர்களைப் பேணுவதிலும், போர் புரிவதிலும் சிறந்து விளங்கினான். நாளும் அந்தணர்களைப் பூஜித்து வணங்குவதையும், அனைவர்க்கும் அன்னதானம் செய்வதையும் ஒரு விரதமாக மேற்கொண்டு செய்துவந்தான். அழகிற் சிறந்தவனும், சிவபெருமானிடத்தில் எல்லையற்ற பக்தியையும் கொண்டவனான அம்மன்னனுக்குப் பிள்ளைச் செல்வம் இல்லாததால் தன்னுடைய அரசவைப் புரோஹிதரான சாண்டில்யர் என்னும் முனிவரை அழைத்து "என்னுடைய வமிசத்தை வளர்ப்பதற்குப் பாண்டிய அரசகுமாரியான என் பட்டத்தரசியினிடத்தில் எனக்குப் புத்திரன் வாய்க்கவில்லை. அதற்கான காரணத்தை அறிந்து சொல்லுமாறு தங்களை வேண்டுகிறேன்" எனக் கூறவும், தன்னுடைய ஞானக் கண்ணினால் அக்காரணத்தை அறிந்த அம்முனிவர், "அரசே ! முந்தைய பிறவியில் எவ்வித குற்றமும் செய்யாத பிராமணனொருவர் தங்களால் தண்டிக்கப்பட்டார். அக்காரணம் பற்றியே தங்களுக்கு இப்பிறவியில் பிள்ளைப் பேறு வாய்க்கவில்லை. அதற்குப் பிராயச்சித்தமாகத் தாங்கள் தீர்த்தயாத்திரையை மேற்கொண்டு சிவபெருமானை வழிபட்டுவந்தால் பிள்ளை பிறக்கும்" எனக் கூறினார். மன்னனும் அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்தவரான கோபலிங்கன் என்னும் தன்னுடைய மந்திரியினிடத்தில் அரசாட்சிப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டுத் தன்னுடைய தீர்த்தயாத்திரையைத் தொடங்கினான்.

பல தேசங்களுக்குச் சென்று புண்ணியநதிகளில் நீராடி, பல முனிவர்களின் ஆச்ரமங்களை எல்லாம் தரிசனம் செய்துகொண்டு வருகையில் அகஸ்தியமுனிவரின் எழில் மிகுந்ததும் அமைதியானதுமான ஆச்ரமத்தை அடைந்தான். முனிவரை வணங்கி தன்னுடைய பிறவியின் பயனை அடைந்துவிட்டதாகக் கூறி மகிழ்ந்தான். பின்பு, அகஸ்தியரிடம் தன்னுடைய மனக்குறையைப் பற்றிக் கூறவும், முனிவர் அம்மன்னனை நோக்கி, "சிவபெருமான் ஒருவரே அனைத்துலகிற்கும் ஒப்பற்ற ஒரே கடவுள்; மூவுலகையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

படைத்து, காத்து, பின்னர் தன்னுள் அனைத்தையும் ஒடுக்கி ஆள்பவர் அவர் ஒருவரே. அனைத்து வேதங்களிலும் போற்றப்படுபவர் சிவபெருமானே; கருணைக்கடலான சிவபெருமான் ஒருவரே எல்லா ஜீவராசிகளாலும் போற்றி வணங்கத்தக்கவர். எனவே, நீ இலிங்கவடிவில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை தினமும் வழிபட்டு வருவாயாக. காவேரி நதியின் தென்கரையில் உன்னதபுரம் என்னும் மிகச் சிறந்த சிவக்ஷேத்திரம் உள்ளது. அங்கு சிவபெருமான் எப்போதும் பரிபூரணமாக எழுந்தருளி அனைத்து உயிரினங்களுக்கும் அருள்பாலித்து வருகிறார். நீ அங்கு சென்று சிவபெருமானைப் போற்றி வழிபடுவாயாக" என உபதேசித்தார். முனிவரின் சொற்களைக் கேட்ட மன்னனுக்கு மேலும் உற்சாகம் பொங்கியது. அப்புனித க்ஷேத்திரத்தில் சிவபெருமான் எழுந்தருளிய விதத்தையும், இன்னும் மற்றவர்கள் அப்பெருமானை அங்கு வழிபட்டுப் பயனடைந்த வரலாற்றையும் தனக்குக் கூறவேண்டும் என்று அகஸ்தியமுனிவரை வேண்டினான்.

அத்தியாயம் 2

அகஸ்தியர் மேலும் கூறலானார்: முன்பு ஒரு சமயம் பிதாமஹரான பிரஹ்மா 'அனைத்து க்ஷேத்திரங்களிலும் சிவக்ஷேத்திரம் உயர்ந்தது; எல்லாச் சிவக்ஷேத்திரங்களுள்ளும் உன்னதபுரி மிகச் சிறப்பு வாய்ந்தது' என நாரதமுனிவருக்குக் கூறினார். உன்னதபுரியில் அருள்புரிந்துவரும் சிவபெருமானை வழிபடுவோர் எல்லா நன்மைகளையும் பெற்று முடிவில் சிவபெருமானுடைய திருவடிகளை அடைந்து பேரானந்தம் எய்துவர் என்றும் கூறினார்.

மேலும் பிரஹ்மா உன்னதபுரிஸ்தலத்தின் பெருமைகளை விளக்கிக் கூறியதாவது:

முன்னொரு காலத்தில் ஸோமகன் என்னும் அரக்கன் தேவர்கள் எப்போதும் அரக்கர்களை வென்று வருவதைக் கண்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவர்களுடைய வலிமைக்குக் காரணம் வேதங்களே என அறிந்து அவற்றை அபகரித்துக் கடலுக்குள் புகுந்தான். இந்திரன் முதலான தேவர்கள் அனைவரும் என்னிடம் வந்து முறையிடவும், நான் அவர்களுடன் விஷ்ணுவைச் சென்று பிரார்த்தித்தேன். விஷ்ணுவும் எங்களிடத்தில் தயை கொண்டு, மீன் வடிவம் தாங்கி, கடலுக்குள் சென்று அவ்வரக்கனுடன் போரிட்டு அவனுடைய உதிரத்தைக் குடித்தார். குடித்த வெறியில் அங்கேயே ஆடித்திரிந்து அனைத்துக் கடல்களையும் ஒன்று சேர்த்தார். அதனால் பூவுலகில் நாடுகளும் நகரங்களும் அழிந்து பெரும் குழப்பம் ஏற்பட்டது. எல்லோரும் கைலாஸசிகரத்தில் உமையம்மையுடன் எப்போதும் ஆனந்தமாயிருந்துவரும் சிவபெருமானைச் சென்றடைந்து தங்கள் குறைகளைத் தெரிவித்தனர். சிவபெருமானும் தன்னுடைய சக்தியினால் ஒரு தெப்பத்தை உண்டாக்கி தேவர்களுடன் பூவுலகுக்கு வந்து எங்கும் கடல் சூழ்ந்திருப்பதைக் கண்டு மிக்க கோபம் கொண்டார். அச்சமயம் மீன் உருவம் கொண்ட விஷ்ணுவானவர் தன்னுடைய வாலால் அத்தெப்பத்தை அடித்தார்; சிவபெருமான் தன்னுடைய இருகைகளாலும் அதைப் பிடித்துப் பிசையவும் விஷ்ணு தன்னுடைய சுயவடிவத்தை அடைந்து நால்வேதங்களையும் பிரஹ்மாவிடம் கொடுத்து சிவபெருமானைப் பணிந்து நின்றார். அத்தெப்பத்தில் செல்லும்போது சிவபெருமான் ஒரு உயர்ந்த மேடான இடத்தில் மிக அழகானதொரு சிறிய நகரத்தைத் தாமே உண்டாக்கினார். அது பலவிதமான காய்கனிகளைக் கொடுக்கும் மரங்களையும் நறுமணம் மிக்க மலர்ச் சோலைகளையும் மனம் கவரும் மாடமாளிகைகளையும் தன்னகத்தே உடையதாயிருந்தது. மேலும், அங்கு வாலகில்யர் முதலான சிவபக்திச் செல்வர்களான பல முனிவர்கள் வாசம் செய்துகொண்டிருந்தனர். தேவர்களனைவரும் அவ்வழகிய நகரத்தைக் கண்டு களிப்புற்று தெப்பத்தை விட்டு அந்நகரத்தில் ஏறினர். சிவபெருமானைக் காணாது வருந்திய அவர்கள் கோடிசூரியனுக்கொப்பான ஒளிபொருந்திய இலிங்கத்தைக் கண்டு மகிழ்ந்து சிவபெருமானைத் துதித்தனர். அவர்கள்பால் மிகுந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்புகொண்டு சிவபெருமானும் "எவ்வாறு கைலாஸசிகரத்தில் பார்வதிதேவியுடன் மிக்க ஆனந்தத்துடன் வசிக்கிறேனோ அதே ஆனந்தத்துடன் இப்புண்ணிய நகரத்தில் பார்வதியுடன் இருந்து அனைத்து ஜீவராசிகளுக்கும் அவர்களுடைய பாவங்களைப் போக்கி நற்கதியை அருளுகிறேன். இவ்விடத்தில் வாசம் செய்வதால் மக்கள் அனைத்துப் பாவங்களினின்றும் விடுபட்டு என்னுடைய திருவடிகளை அடைவார்கள்" என்று கூறினார். அன்றுமுதல் அந்த க்ஷேத்திரம் உன்னதபுரம் என்றும், ப்லாவனபுரம் என்றும், பூலோககைலாசமென்றும் அழைக்கப்படுகிறது. கைலாஸம், காசி, கோகர்ணம், திருவையாறு, கும்பகோணம், சிதம்பரம் முதலான மஹிமை வாய்ந்த சிவத்தலங்களுக்கு அது நிகரானது.

பிரஹ்மா மேலும் கூறியதாவது: முன்னொரு காலத்தில் விஷ்ணுவானவர் கருடவாஹனத்திலேறி அனைத்துலகையும் சஞ்சரித்து வருகையில் கைலாஸகிரியைச் சென்றடைந்தார். அங்கு அழைப்பு இல்லாமல் வந்ததால் நந்திபகவானால் தடுக்கப்பட்டபோது கோபம் கொண்டு அவரைத் தன் கதாயுதத்தால் தாக்கி மூர்ச்சையாகி விழச் செய்தார். சிவபெருமான் விஷ்ணுவை மனிதனாகவும், கருடனை ஒரு சாதாரணப் பறவையாகவும் பிறக்கும்படிச் சாபம் இட்டார். பின்னர் அவ்விருவராலும் மிகவும் வணங்கிப் பிரார்த்தித்துக் கொண்டதன்மேல் அவர்கள்பால் கருணைகொண்டு விஷ்ணுவை நோக்கி " நீ பூவுலகில் அயோத்திக்கு அரசனான தசரதனுக்கு இராமன் என்னும் பெயருடைய மகனாகப் பிறந்து சீதையை மணந்து பின்னர் இராவணன் முதலான அரக்கர்களைப் போரில் வென்று பதினாயிரம் ஆண்டுகள் அரசாண்டு மிக்க புகழடைந்து மீட்டும் வைகுண்டலோகத்தை அடைவாய். நீ இப்போது செய்த சிவாபராதத்திற்குக் கழுவாய் யாதுமில்லையாயினும் நீ இராமனாகப் பிறக்கும் போது காவேரி நதியின் தென்கரையில் உள்ளதும், திருவையாறு என்னும் ஒப்பற்ற சிவக்ஷேத்திரத்திற்குத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தென்கிழக்கில் உள்ளதும், தஞ்சைக்குக் கிழக்கில் உள்ளதும், கும்பகோணத்திற்குத் தென்மேற்கில் உள்ளதுமான மிகச் சிறப்பு வாய்ந்த உன்னதபுரம் என்னும் சிவத்தலத்தில் கருடனுடன் ஆறு மாதங்கள் வசித்து வந்தால் உங்களுடைய பாவத்தினின்றும் நீங்கி மீண்டும் வைகுண்டத்தை அடைவீர்கள்" என்று கூறினார்.

அத்தியாயம் 3

விஷ்ணுவானவர் பல உலகங்களுக்குச் சென்று முடிவில் உன்னதபுரத்திற்கு வந்து சேர்ந்தார். அங்கு சிவாலயம் முதலியவற்றைக் கண்டு களிப்புற்று சிவலிங்கத்தை ஸ்ரீருத்ரம், சமகம் ஆகிய வேதமந்திரங்களால் பலவாற்றானும் அர்ச்சித்து வழிபட்டார். சிவபெருமானும் கோடிசூரியனுக்கொப்பான பிரகாசத்துடன் சிவலிங்கத்தினின்றும் வெளிப்பட்டு சந்நிதியின் கீழ்த்திசையில் தன்னுடைய சூலத்தினால் பூமியைப் பிளக்கவும், பாதாளத்தினின்றும் நீர் வெளிப்பட்டது. அத்துடன் தன்னுடைய சடையிலுள்ள கங்கை நீரையும் கலந்து அதைப் புனிதமாக்கி அதில் தானும் புனிதநீராடி, விஷ்ணுவையும் அவ்வாறே செய்யும்படி ஆணையிட்டார். மேலும், தினமும் அந்நீரினால் சிவலிங்கத்தை அபிஷேகம் செய்து வழிபட்டுவந்தால் விஷ்ணுவினுடைய சிவ அபராதபாவம் நீங்கும் என்றும், அந்தப் புனிதநீருக்கு நிகரான மற்றொன்று மூவுலகிலும் இல்லை என்றும் கூறினார். சிவபெருமான் கட்டளைப்படியே விஷ்ணுவும் அத்தீர்த்தத்தில் நீராடி சிவபெருமானை அபிஷேகம் முதலியவற்றால் அர்ச்சித்து வழிபட்டு சிவபெருமானை பல தோத்திரங்களால் துதித்தார். அவருடைய பக்தியை மெச்சி சிவபெருமான் மிக்க அழகு பொருந்திய வடிவம் கொண்டு அவர்முன் தோன்றி "நீ பாவத்தினின்றும் விடுபட்டாய்" என்று கூறினார். விஷ்ணுவும் மிக மகிழ்ந்து தனக்குச் சக்ராயுதம் அளிக்கவேண்டும் என்று வேண்டவும், சிவபெருமான் அச்சக்ராயுதத்தை அவருக்கு அருளினார். பின்னர், உன்னதபுரியின் எல்லைகளில் நரஸிம்ஹர்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பத்ரகாளி முதலிய தெய்வங்களைத் தாபித்து நகரத்தைப் புதுப்பிக்கும்படி விஷ்ணுவுக்குக் கட்டளையிட்டார். ஆலயத்தின் மேற்குப் புறத்தில் அமைந்த தீர்த்தத்தின் மஹிமை பெருமைகளை அவருக்கு எடுத்துக் கூறினார். பின்னர், விஷ்ணுவின் கட்டளைப்படி தேவசிற்பியான விச்வகர்மா பல மாளிகைகளையும் நந்தவனங்களையும் கொண்டதுமான இந்நகரத்தை நிர்மாணித்தார். அப்புண்ணியதீர்த்தம் சிவகங்கை எனவும் அழைக்கப்படுகிறது. வைசாகமாதத்து சுக்லபக்ஷத்தில் வைசாகநக்ஷத்திரம் கூடிய நாளில் இத்தீர்த்தத்தில் நீராடினால் பல கொடிய பாவங்களினின்றும் நீங்குகிறான்.

அத்தியாயம் 4

பிரஹ்மா மேலும் நாரதருக்குக் கூறியதாவது:

முன்னர் கைலாஸமலையில் சிவபெருமானால் சபிக்கப்பட்ட கருடனானது சாதாரணப் பறவை வடிவம் கொண்டு, மூன்றாண்டுகள் அங்குமிங்கும் திரிந்து, மிக்க பசியால் வாடி, உன்னதபுரியிலமைந்த இப்புண்ணிய தீர்த்தத்திலுள்ள மீன்களைப் பிடிக்க அக்குளத்தில் விழுந்தது. உடனே தன்னுடைய சுயஞானமும் உருவமும் அடைந்து சிவபெருமானால் அருளப்பட்ட புனித தீர்த்தம் இதுதான் என அறிந்து, மிக்க மன மகிழ்ச்சியுடன் சிவபெருமானை முறைப்படி வழிபட்டது. பெருமானும் அதன் முன் தோன்றி "உனது சாபம் நீங்கியது" எனக் கூறினார். மிகவும் ஆனந்தமடைந்த கருடன் ஊருக்கு வடக்கில் தன் பெயரிலேயே ஒரு அழகிய தீர்த்தத்தை உண்டுபண்ணி தானும் அதில் ஸ்நானம் செய்து சிவபெருமானை வழிபட்டுப் பலகாலம் அவ்வூரில் வசித்து வந்தது. அப்புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வோருக்கு அனைத்து நோயும் நீங்கும். அவர்கள் முடிவில் சிவபதம் அடைவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்தியாயம் 5

முன்னொருகாலத்தில் காஞ்சீபுரத்தில் தர்மஜ்ஞன் என்னும் பெயர் கொண்ட பிராமணர் ஒருவர் வாழ்ந்துவந்தார். அவர் மிகவும் அடக்கமானவர்; புலன்களை அடக்கி சிவபக்தியில் மனத்தைச் செலுத்திவந்தார். அவருக்கு தன்னுடைய மகனான துர்ஜயன் என்பவனுக்கு உபநயனம் முதலியவற்றை முறையே செய்வித்து ஸுஹோதா என்னும் குருவினிடத்தில் அவனை ஒப்படைத்து வேதம் முதலியவற்றை அவனுக்குக் கற்பிக்குமாறு வேண்டினார். துர்ஜயனும் பல வருடங்கள் குருகுலவாசம் செய்து வித்தைகளைக் கற்றான். பின்னர் ஒரு நாள் குருவானவர் தன் வீட்டையும் மனைவியையும் துர்ஜயனிடம் ஒப்படைத்துவிட்டு ஸ்ரீரங்கம் என்னும் புண்ணியத்தலத்திற்குச் சென்றார். அவர் சென்றவுடன் துர்ஜயன் குருபத்தினியின்பால் மோகமும் காதலும் கொண்டு அவளை அழைக்கவும் அவளும் அதற்கு உடன்பட்டாள். பின்பு ஒருநாள் குரு வீடுதிரும்பியவுடன் தூங்கும் பொழுது துர்ஜயன் அவரைத் தாக்கிக் கொன்று அவருடைய மனைவியுடன் இரவில் வெளியேறினான். பசியாலும் சோர்வினாலும் மிகவும் வாடி பல இடங்களுக்கு அலைந்து திரிந்து முடிவில் தன்னுடைய தவற்றை உணர்ந்தான். பிரம்மஹத்தி என்னும் கொடிய பாவத்தைச் செய்ததால் தீர்த்தயாத்திரை செய்வதன் மூலமே தனக்குக் கழுவாய் ஏற்படும் என உணர்ந்து பல தலங்களுக்கும் புண்ணியதீர்த்தங்களுக்கும் சென்றுகொண்டிருக்கையில் உன்னதபுரத்தலத்திற்கு வந்து சேர்ந்தான். அவனுடைய துன்பத்தையறிந்த பார்வதிதேவியானவள் அவனைக் காத்து இரட்சிக்கும்படி சிவபெருமானை வேண்டினாள். இருவரும் வயதான தம்பதி உருவம் கொண்டு துர்ஜயன் முன் தோன்றி அவனுடைய துக்கத்தின் காரணத்தை அறிந்து "நீ செய்த பிரம்மஹத்தி குருபத்தினியைப் புணர்தல் ஆகிய கொடிய மஹாபாவங்களுக்குக் கழுவாய் இல்லையாயினும் நான் அதற்கான பிராயச்சித்தைக் கூறுகிறேன், கேள்" எனக் கூறி,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உன்னதபுரத்தலத்தின் மஹிமையை அவனுக்கு எடுத்துச் சொன்னார். மேலும், எல்லாப் பாவங்களையும் போக்கவல்ல சிவகங்கை என்னும் புண்ணியதீர்த்தத்தின் பெருமையையும், சிவப்ரியாம்பாளுடன் கூடிஎழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் மஹிமையையும் விரித்துக் கூறினார். துர்ஜயனும் மூன்றுமாதகாலம் தினமும் புண்ணிய தீர்த்தத்தில் நீராடி, விபூதி ருத்ராக்ஷம் முதலான சிவசின்னங்களைத் தரித்து ஆயிரம் முறை ஆலயத்தை வலம் வந்து சிவபெருமானை பக்தியுடன் வழிபட்டு வந்தான். முடிவில் கொடிய பாவங்களினின்றும் நீங்கி சிவபதம் அடைந்தான்.

அத்தியாயம் 6

பிரஹ்மா மேலும் நாரதருக்குக் கூறுகிறார்:

சிவபெருமானின் ஒரு அம்சமாக விஷ்ணுவும் மற்றோரம்சமாக நான்கு முகங்களைக் கொண்ட பிரஹ்மாவாகிய நானும் தோன்றினோம். எனது நான்கு முகங்களால் ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் எனும் நான்கு வேதங்களையும் மற்ற சாத்திரங்களையும் கூறி சிவபெருமானைத் துதித்தேன். மிக்க மகிழ்ச்சியுற்ற சிவபெருமானும் "உன் முகத்திலிருந்து வெளிப்பட்ட இந்நான்குவேதங்களைக் கற்று அந்த மந்திரங்கள் வாயிலாக பிராமணர் முதலான நான்கு வருணத்தவர்களும் தங்களுடைய கருமங்களைச் செய்து கொண்டும், தேவர்களையும் அவர்களுக்கெல்லாம் ஒப்பற்ற ஒரே தலைவனான என்னையும் வேதமந்திரங்களால் ஆராதனை செய்து தங்களுடைய விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வார்கள். முடிவில் மோட்சத்தையும் அடைவார்கள்" எனக் கூறினார். அதனால் வேதங்கள் கர்வமுற்றன. இதனால் கோபம் கொண்ட சிவபெருமான் அவற்றின் கர்வத்தை அழிக்கும் பொருட்டு பிராம்மணர் முதலான நான்கு வருணத்தவர்களிடமிருந்தும் அவரவர்களின் சக்தியை நீக்கினார். அதனால் அவர்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வைதிகக்கருமங்களில் நம்பிக்கை இழந்து வருணாசிரம தருமங்களைக் கைவிட்டனர். வேதத்தைக் கற்போர் யாவருமில்லாததால் வேதங்கள் பூவுலகில் வழக்கொழிந்தன. ஆதலால் அங்கு பெரும் குழப்பம் நிலவியது. யாகங்களைச் செய்வோர் இல்லாததால் இந்திரன் முதலான தேவர்கள் மிகவும் கவலையுற்று எல்லோரும் என்னிடம் முறையிடவும், நான் அனைவருடன் விஷ்ணுவைப் பிரார்த்தித்தேன். அவரும் எங்கள்பால் கருணை கொண்டு நீங்கள் அனைவரும் உன்னதபுரியில் அருள்புரிந்துவரும் சிவபெருமானை வணங்கி வழிபட்டால் உங்கள் குறை தீரும் எனக் கூறினார். பிறகு பிரஹ்மாவானவர் வேதங்களை அழைத்துக் கொண்டு உன்னதபுரியை அடைந்து அங்கு மிகுந்த நியமங்களுடன் சிவபெருமானை வழிபட்டு வந்தார். வேதங்கள் சிவபெருமானைப் பலவாறு துதி செய்து தங்களுக்கே உரிய உயர்ந்த சக்தியை மீண்டும் அருளவேண்டும் எனப் பிரார்த்தித்துக் கொண்டன. அவற்றின்பால் கருணைகொண்ட சிவபெருமான் அப்படியே கட்டும் என அருள் பாலித்தார். அதனால் மீண்டும் உலகில் வேதங்கள் முதலியன கற்கப்பட்டன; வைதிக ஆசாரங்கள் மக்களால் மீண்டும் கடைப்பிடிக்கப்பட்டன.

அத்தியாயம் 7

அடுத்து கண்வயோகியின் சரிதத்தைப் பிரஹ்மா விரித்துக் கூறினார்:

முன்னொரு காலத்தில் புருஹூத்ஸமஹர்ஷியின் புதல்வரும், வேதவேதாந்தங்களைக் கற்றுணர்ந்தவருமான கண்வர் என்னும் மஹாயோகி கங்கைக் கரையிலேயே சடைமுடிதரித்துத் தவமியற்றி வந்தார். அவருடைய தவத்தின் கடுமையைக் கண்டு கவலையுற்ற இந்திரன் அதற்கு இடையூறு செய்ய எண்ணி, தான் ஒரு பிராமண உருவம் கொண்டு அவருடைய ஆச்ரம சமீபம் அடைந்து தன்னைத் தாக்க ஒரு புலி வருவதைக் கண்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்னைக் காப்பாற்றுங்கள் எனக் கூக்குரலிட்டான். கண்வரும் அவர்பால் கருணை கொண்டு பிராம்மணனைத் தடுத்தார். எனினும் புலி பிராம்மணனைக் கவர்ந்து சென்றது. தன்னைச் சரணமடைந்தவரைக் காக்கத் தவறினோமே என மிகுந்த துக்கத்தை அடைந்த கண்வர் தனது தந்தையின் இருப்பிடம் முதலான பல புண்ணியத்தலங்களுக்குச் சென்று முடிவில் பஞ்சநதக்ஷேத்திரமென அழைக்கப்படும் திருவையாற்றுக்கு வந்து ஐயாறப்பனை வழிபட்டுவரும் காலத்தில் அங்கு காவேரியில் துலாஸ்நானம் செய்வதற்காக மார்கண்டேயமுனிவர் வந்து சேர்ந்தார். அவரிடம் கண்வர் தன்னுடைய மனக் குறையைத் தெரிவிக்கையில் சிவபெருமான் அசரீரி வாக்காக "இங்கிருந்து தென்கிழக்கு திசையில் உன்னதபுரமென்னும் புண்ணியத்தலம் உள்ளது நான் அப்புண்ணியத்தலத்தில் மிகுந்த உவகையுடன் எப்போதும் வாசம் செய்கிறேன். அங்குள்ள புண்ணியதீர்த்தத்தில் நீராடினால் அனைத்துப் பாவங்களும் நீங்கும்" எனக் கூறக் கேட்டு முனிவர்களிருவரும் உன்னதபுரத்தை அடைந்தனர். கண்வர் தன்னுடைய மனைவியுடனும், மார்க்கண்டேயருடனும் அவ்வாறே நீராடி அங்குள்ள மஹாலிங்கத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைப் பக்தியுடன் வழிபட்டனர். சிவபெருமானைக் குறித்து பலதுதிகளைச் செய்தார். சிவபெருமானும் அவர்களுடைய பக்தியினால் மகிழ்ந்து கண்வருடைய மனக்குறையைப் போக்கியருளினார்.

அத்தியாயம் 8

முன்னொருகாலத்தில் தத்தாத்ரேயமஹர்ஷியின் சீடரும், அவரிடமிருந்து ராஜயோகம் முதலியவற்றைக் கற்று யோகாப்பியாஸத்தில் வல்லவராகத் திகழ்ந்தவரும், ஸஹ்யமலையில் வசித்துவருபவருமான ஸதானந்தர் என்னும் முனிவர் சித்கலா என்னும் தன்னுடைய பாரியையுடன் பல புண்ணியத்தலங்களுக்குச் சென்று அங்குள்ள சிவலிங்கங்களை வழிபட எண்ணினார். அவ்வாறே, சிவபெருமானுடைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருளாணையின் வண்ணம் புறப்பட்டு வழியில் அமைந்துள்ள கபிலமுனிவரால் தாபித்து வழிபடப்பட்ட கபிலேச்வரம், ஸங்கமுகம், அகஸ்தியேச்வரம், ஸ்ரீரங்கம், திருவானைக்கா ஆகிய தலங்களைத் தரிசித்து தால்ப்யர் என்னும் முனிவருடைய ஆச்ரமத்தை அடைந்தனர். இதற்கிடையில் கோதாவரி நதிக்கரையில் பிராம்மணர்கள் நிறைந்த ஸுபத்ரம் எனும் அக்ரஹாரத்தில் வேதங்களை நன்கு கற்ற ஸுபத்ரன் என்னும் பிராம்மணன் தன்னுடைய மகன்ளுடன் வாழ்ந்து வந்தான். வேதவேதாந்தங்களைக் கற்ற அவனுடைய புத்திரர்கள் ஒருசமயம் அவனிடம் வந்து சாத்திரங்களில் விதிக்கப்பட்ட கருமங்களே மிகச் சிறந்தவை என ஒருவனும், பக்தியே சிறந்தது என மற்றவனும், யோகம் ஒன்றே எல்லாவற்றுள்ளும் தலையாயது என மற்றவனும் கூறினார்கள். ஸுபத்ரன் இதற்கு விடையளிக்கப் போதுமான கல்வியறிவு தனக்கு இல்லையென்று உணர்ந்து இதற்குத் தகுந்த அறிவு படைத்தவரைத் தேடி தன்மகன்களுடன் பல ஊர்களுக்குச் சென்று வந்தான். முடிவில் காவேரிநதிக்கரையை அடைந்து அங்குள்ள திருவையாறு என்னும் க்ஷேத்திரத்திற்குச் சென்று ஐயாறப்பனையும் தர்மஸம்வர்த்தனி அம்பாளையும் வழிபட்டு பின்னர் உன்னதபுரத்தை வந்தடைந்தனர். அங்கு மஹாலிங்கத்தை அர்ச்சித்து தோத்திரங்களால் பலவாறாகத் துதித்தனர்.

அத்தியாயம் 9

இவ்வாறு அங்கு தால்ப்யர், கண்வர், தர்மவர்மன் என்னும் அரசன், ஸதானந்தர் மற்றும் அவருடைய புத்திரர்கள் ஆகியோர் கூடியிருந்து வாதிட்டு வருகையில் அவர்களுக்கு முன்பாக சடைகளையும், ருத்திராக்ஷங்களையும் திருநீற்றையும் தரித்த ஒரு அழகு பொருந்திய யௌவனவயதுடைய முனிவர் தோன்றி மறைந்தார். அனைவரும் தோத்திரங்களாலும் மலர்களாலும் மஹாலிங்கத்தை வழிபடவும், சிவபெருமான் தோன்றி மும்மூர்த்திகளுள்ளும் தான் ஒருவனே தலையாயவன் என்றும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தன்னுடைய சக்தியான மஹாமாயையினால் மட்டுமே அனைத்து உலகங்களும் படைக்கப்பட்டு காக்கப்படுகின்றன என்றும், சிவபெருமானாகிய தன்னை அறிவது மிக்க கடினம் என்றும் விளக்கிக் கூறினார். மற்றவர்களால் செய்ய இயலாதவற்றை சிவபெருமான் ஒருவரே செய்யவல்லவர். எடுத்துக்காட்டாக ஹாலாஹலமென்னும் கொடியவிஷத்தை அருந்தியது, திரிபுராசுரர்களை தன்னுடைய அட்டஹாஸம் என்னும் சிரிப்பினால் வதம் செய்தது, மூவுலகங்களையும் தன்னுடைய அழகினால் மோகிக்கச் செய்யும் மன்மதனை எரித்தது, மஹாபிரளயகாலத்தில் அனைத்துலகங்களும் அழிந்துபட்டபோது சிவபெருமான் ஒருவரே ஆனந்தநடம் செய்தது, எல்லா ஜீவராசிகளின்பால் கருணைகொண்டு தன்னுடைய புன்னகையினால் அவற்றைக் காத்தது முதலான செய்கைகள் வேறெந்ததேவராலும் செய்ய இயலாதது. எனவே, சிவபெருமான் ஒருவரே ஒப்பற்ற ஒரே கடவுள் என ஐயம் திரிபறக் கூறினார். முனிவர்களும் அதைக் கேட்டு மிக்க சந்தோஷமடைந்து பெருமானைத் துதித்தனர். பின்னர், கருமம், சிவபக்தி முதலியவற்றைப் பற்றி விரிவாக அங்கு எடுத்துரைக்கப்பட்டது.

அத்தியாயம் 10

தர்மவர்மா என்னும் அரசன் அர்த்தோதயம் என்னும் புண்ணியகாலத்தில் இராமபிரான் கட்டிய சேதுவில் ஸ்நானம் செய்ய விருப்பமுடையவனாக இருந்தும் உன்னதபுரியிலிருந்து அங்கு செல்ல இயலாததால் வருத்தமுற்று சிவபெருமானை வேண்டவும், பெருமான் அவன் முன் தோன்றி "இவ்விடத்திலேயே ஏழு கடல்களையும் கொணர்கிறேன் நீ அதில் உன் விருப்பப்படி ஸ்நானம் செய்வாயாக" என்று கூறிய மாத்திரத்தில் எல்லா சாகரங்களும் மிக வேகத்துடன் காடு மலை நகரம் முதலியவற்றை அழித்து முதலை திமிங்கிலம் முதலான கொடிய கடல்வாழ் மிருகங்களுடன் அங்கு வந்து சேர்ந்தன. தால்ப்யர் முதலான முனிவர்கள் மிக்க மகிழ்ச்சியுற்று சிவபெருமானுடைய எல்லையற்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கருணையை எண்ணி வியந்து பஞ்சாக்ஷரம் முதலிய மந்திரங்களை ஜபம் செய்தனர்; சிலர் ஆனந்தக் கூத்தாடினர். கடல்கள் அங்கு வந்து சேர்ந்ததால் சிவாலயத்தைத் தவிர மற்றவை அழிந்தன. தர்மவர்மா மிக்க பக்தியுடன் சிவபெருமானைப் பலவாறாகத் துதித்தான். சிவபெருமான் அருளால் அனைத்துக் கடல்களும் உன்னதபுரியிலுள்ள புண்ணியதீர்த்தத்தில் எப்போதும் வாசம் செய்யவேண்டும் எனவும், அங்கு முன்போலவே நாடும் நகரங்களும் செழித்து வளரவேண்டுமெனவும் பிரார்த்தித்தான். மற்ற முனிவர்களும் மகிழ்ந்து துதித்தனர். சிவபெருமானும் அவ்வாறே அருளினார். இப்புண்ணியக் கதையைக் கேள்வியுற்ற மற்றவர்களும் அயலூர்களிலிருந்து உன்னதபுரிக்கு வந்து கார்த்திகை மாதத்து சோமவாரத்திலும், ஞாயிற்றுக்கிழமையிலும் சிவகங்கை தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து மஹாலிங்கத்தை வழிபட்டு மகிழ்ந்தனர்.

அத்தியாயம் 11

பிரஹ்மா நாரதருக்குத் தொடர்ந்து கூறியதாவது:

எல்லா உலகங்களையும் படைத்துவருவதால் கர்வமுற்ற நான் ஹம்ஸவாஹனத்திலேறி அனைத்துலகங்களையும் சுற்றிவருகையில் பாற்கடலில் யோகநித்திரையில் ஆழ்ந்த விஷ்ணுவைக் கண்டபோது அவர்தான் எல்லா உலகங்களையும் காப்பவர் என மார்க்கண்டேயமுனிவர் என்னிடம் கூறினார். நான் அவர் கூற்றைச் சட்டைசெய்யாமல் ஒரு தடியினால் அம்முனிவரை அடித்தேன். ஒரு புன்சிரிப்புடன் ஹரியானவர் என்னை நோக்கி "பிரம்மாவாகிய நீயோ அல்லது நானோ இவ்வுலகைப் படைக்கும் கர்த்தா அல்லோம். எல்லா சக்தியும் பொருந்திய ஸ்ரீருத்ரன் ஒருவரே உலகைப் படைத்தல் முதலான தொழில்களைச் செய்யும் வல்லமை படைத்தவர்" எனக் கூறவும், சிவபெருமான் எப்போதும் சுடுகாட்டிலேயே திரிந்து பிரேதங்களின் சாம்பலைப் பூசிக்கொண்டு கபாலமாலைகளையும், பாம்புகளையும் அணிந்து கூத்தாடுவதால் அவருக்கு என்ன சக்தி இருக்கக்கூடும் என

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரம்மாவான நான் இடைமறித்துக் கூறிவிட்டு என்னுடைய லோகத்திற்கு வந்தேன். உடனே சிருஷ்டித் தொழில் செய்யும் என்னுடைய சக்தி என்னிடமிருந்து நீங்கியதால் நான் செயலற்று நின்றேன். அப்போது "ஓ மூடனே ! சர்வவல்லமைபொருந்திய சிவபெருமானை நிந்தனை செய்ததால் நீ செயலற்றுப் போனாய்" என வானில் ஒரு அசரீரி வாக்கு கூறியது. அதைக்கேட்டு என்னுடைய பாவத்திற்குக் கழுவாய் யாது என நான் சிந்தித்துக் கொண்டிருக்கையில் எனக்கு அப்போது உன்னதபுரியிலிருக்கும் மஹாலிங்கத்தின் மஹிமை ஞாபகத்திற்கு வந்தது. உடனே அங்கு சென்று அவ்வூரின் தென்மேற்குப் புறத்தில் ஒரு யாகசாலையை அமைத்து சிவபெருமானைக் குறித்து ஒரு மிக நீண்ட யாகத்தைத் தொடங்கினேன். அனைத்து தேவர்களும், பல மஹர்ஷிகளும் என்னால் அழைக்கப்பட்டு அங்கு வந்து குழுமினர். யாகத்தின் இறுதியில் வேதவிற்பன்னர்களான அனைத்து பிராம்மணர்களுக்கும் மற்றுமுள்ள அனைவர்க்கும் சிறப்பான போஜனம் செய்வித்து சிவபெருமானைப் பக்தியுடன் துதித்து கர்வத்தினால் நான் செய்த தவற்றை மன்னித்தருளும்படி வேண்டினேன். பெருமானும் என் முன் தோன்றி என்னை மன்னித்து சிருஷ்டித் தொழில் செய்யும் சக்தியை மீண்டும் எனக்கே அருளினார். மேலும் நான் அமைத்த புண்ணியதீர்த்தம் என்பெயராலேயே வழங்கப்படும் என்றும் அதில் ஸ்நானம் செய்வோர் அனைத்துப் பாவங்களினின்றும் நீங்குவர் என்றும் வரமளித்தார்.

அகஸ்தியர் கூறியதாவது: இவ்வாறாக பிரம்மா உன்னதபுரிஸ்தலத்தின் விசேஷமஹிமைகளை நாரதருக்கு விரித்துக் கூறினார். நாரதரும் எல்லையற்ற ஆனந்தத்தை அடைந்து அனைவரும் கூடிய அச்சபையில் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து என்ன பாக்கியம் ! என்ன பாக்கியம் ! எனப் புளகாங்கிதமடைந்து பிரம்மாவிடம் விடைபெற்றுத் தன் ஆச்ரமம் போய்ச் சேர்ந்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்தியாயம் 12

இவ்வளவு விருத்தாந்தங்களையும் அகஸ்தியர் வாயிலாகக் கேட்டுக் கொண்டிருந்த கல்மாஷபாத அரசனுக்கு உடனே உன்னதபுரிக்குச் சென்று மஹாலிங்கத்தை வழிபடவேண்டுமென்னும் அவா ஏற்பட்டது. அவனும் அவ்வாறு அங்கு சென்று ஏழு நாட்கள் தேடியும் மஹாலிங்கத்தைக் காணாமல் முடிவில் சிவவேடம் புனைந்த ஒரு வயதான அந்தணதம்பதியர் 'என்னைக் காப்பாற்றுங்கள். ஒரு வேடன் எங்களைக் கொல்லவருகிறான்' எனக் கூவிக்கொண்டு தன்னை நோக்கி ஓடிவருவதைக் கண்டான். அரசன் பாணத்தைத் தொடுப்பதற்குமுன் அவ்வேடன் அந்தணனைக் குறித்து அம்பெய்தி அவரைக் கொன்றான். மிக்க வருத்தமுற்ற கல்மாஷபாதன் அவனைத் துரத்திக் கொண்டு தொலைதூரம் ஓடியும் அவனைக் காணமல் சோர்வுற்று, வயதான அந்தணனை வேடனிடமிருந்து காக்கத்தவறிய தன்னுடைய வீரத்தை நொந்து கொண்டே மீண்டும் திரும்பி வந்தான். கணவனைப் பிரிந்த துக்கத்தால் வாடிய அந்த வயதான மூதாட்டியும் அரசனை மிகவும் நொந்து தானும் உயிரை விடுவதே மேல் என எண்ணினாள். மன்னன் தடுத்தும் கேளாமல் கணவனுடன் உடன் கட்டையேறும் தருணத்தில் மன்னன் தன்னுடைய கடமையைச் செய்யத் தவறியதற்கு தானும் உயிரை மாய்த்துக்கொள்ள எண்ணித் தீ மூட்டினான் . உடனே சிவபெருமானும் சிவப்ரியாம்பாளுடன் அங்கு தோன்றி அரசனைக் கைப்பிடித்து நிறுத்தினர். உடனே அங்கு வானத்திலிருந்து பூமாரி பெய்தது. கல்மாஷபாதன் ஆனந்தக்களிப்புடன் சிவபெருமானைத் துதித்தான். சிவபெருமானும் மிக்க மகிழ்ச்சியுடன் "அரசனே ! உன்னுடைய பக்தியையும் விடாமுயற்சியையும் சோதிப்பதற்கே யாம் முதலில் உன் கண்களில் படாதவாறு இருந்தோம். உன் பக்தியை மெச்சி யாம் இப்புண்ணியக்ஷேத்திரத்தில் எமது பரிவாரங்களுடன் எப்போதும் வாசம் செய்வோம். நீ எனது ஆலயத்தை நன்கு செப்பனிட்டு பிராகாரம், கோபுரம் ஆகியவற்றுடன் கட்டி முடிக்கவேண்டும்" எனக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கட்டளையிட்டருளினார். அரசனும் அவ்வாறே மிக நேர்த்தியாக எல்லாவற்றையும் செய்து பாண்டியமன்னன், கேரளமன்னன் ஆகியோரை அழைத்து வைசாகமாதத்தில் மஹோத்ஸவம் முதலியவற்றைச் செய்தான். முதலில் நரஸிம்ஹருக்கும் பின்னர் சிவபெருமானுக்கும் தனித்தனியே உற்சவத்தை முறையாகச் செய்வித்தான். இறுதியில் விசேஷ அபிஷேகங்களையும், பலவகையான நிவேதனங்களையும் மற்றும் பல உபசாரங்களையும் பெருமானுக்குச் செய்தான். சிவபெருமானும் அவ்வரசன்பால் அதிகப் ப்ரீதியுடன் "உனது பக்தியால் யாம் மிக்க மகிழ்ச்சியடைந்தோம். உனக்கு விரைவில் ஒரு நல்ல மகன் பிறப்பான். நீயும் பல வருடங்கள் அரசாண்டு முடிவில் சிவபதத்தை அடைவாய்" என அருளினார். பின்பு அரசனின் பிரார்த்தனையின் பேரில் அவனுக்கு யாதகீ மரத்தைச் சின்னமாக உடைய கொடியையும், வேப்பமரச்சின்னம் பொறித்த கொடியைப் பத்மவர்ணன் என்னும் அரசனுக்கும் பனைமரச்சின்னம் பொறித்த கொடியை வீரஸேனன் என்னும் அரசனுக்கும் அருளினார்.

பிறகு உரிய காலத்தில் கல்மாஷபாதனுடைய அரசி கருவுற்று ஒரு நல்ல நாளில் அழகிய ஆண்மகனை ஈன்றாள். அரசன் எல்லையற்ற ஆனந்தம் கொண்டு அந்தணர்களுக்கு நிறைய தானங்களைச் செய்தான். தன் மகனுக்கு ஹரதத்தன் எனப் பெயரிட்டான். அவனுக்கு உரியகாலத்தில் உபநயனம் முதலிய சடங்குகளை நிறைவேற்றி வேதாப்பியாசம் செய்வித்து எல்லா வித்தைகளிலும் தேர்ச்சிபெறச்செய்தான். அவனுக்கு விதர்ப்பதேசத்தரசனுடைய மகளை மணம் முடித்து அரசாட்சிப் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்து உன்னதபுரிக்கு வந்து மஹாலிங்கத்தைத் தினமும் வழிபட்டு வந்து முடிவில் சிவஸாயுஜ்ஜியத்தை அடைந்தான். அவனுடைய மகனான ஹரதத்தனும் வெகுகாலம் கழித்து அரசுப் பொறுப்பைத் தன்மகனான சிவதத்தனிடம் ஒப்படைத்து உன்னதபுரியில் சிவபெருமானை வழிபட்டு முடிவில் சிவபதம் அடைந்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முடிவுரை

இந்த உன்னதபுரி என்னும் சிவத்தலம் இத்தகைய சிறப்பு வாய்ந்தது. இச்சிவாலயத்தைச் செப்பனிட்டு புதுப்பிப்பவர்கள் சிவப்பேறு அடைவார்கள். அவர்களுடைய முன்னோர்களாகிய பித்ருக்கள் நற்கதியடைவர். இங்கு அன்னதானம் முதலியவற்றைச் செய்பவர்கள் இவ்வுலகில் அனைத்து நலன்களையும் பெற்று முடிவில் சிவப்பேறடைவது உறுதி.

இந்த உன்னதபுரீச்வரமாஹாத்மியத்தைப் பக்தியுடன் கேட்போர் எல்லா -நலன்களையும் அடைவார்கள். மற்றவர்கள் கேட்கும்படி இப்புராணத்தை வாசிக்கும் பௌராணிகரை நன்கு அலங்கரித்து அவருக்குத் தக்க உபசாரங்களையும் செய்து கௌரவித்தால் அனைத்து மங்களங்களும் உண்டாகும். இந்த ஸ்தலமாஹாத்மியத்தை மிகுந்த பக்திசிரத்தையுடன் கேட்டுவரவேண்டும். பௌராணிகரை அவமத்தித்தாலோ, வெற்றிலை முதலியவற்றை வாயிலடக்கிக் கொண்டு புராணத்தைக் கேட்டாலோ மஹாபாபம் விளையும் அவ்வாறு செய்பவன் கொடிய நரகத்தில் வீழ்வான்.

இப்படிப்பட்ட மஹிமை வாய்ந்த இந்த ஸ்தலபுராணத்தை ஸுதமுனிவர் வாயிலாகக் கூறக்கேட்ட நைமிசாரண்யவாசிகளான அனைத்து முனிவர்களும் மிக்க ஆனந்தமடைந்து ஸுதமுனிவருக்குத் தங்களாலியன்ற தண்டம், கமண்டலு முதலியவற்றைத் தானமாகத் தந்தார்கள். சிலர் அவரை நன்கு தழுவிக் கொண்டார்கள். பிறகு எல்லோரும் அவரவர்களுடைய ஆச்ரமத்துக்குச் சென்றனர்.

லக்ஷ்மீபதியான விஷ்ணு, பிரம்மா, தால்ப்யமுனிவர், கருடன், ஸுபத்ரன் என்னும் பிராம்மணன் மற்றும் ஸ்ரீராமன், லக்ஷ்மணன் முதலியோர்களால் பக்தியுடன் பூஜிக்கப்பட்ட ஸ்ரீஉன்னதபுரீச்வரர் நம் அனைவரையும் காத்தருளட்டும் !! எல்லா மங்களங்களும் பெருகட்டும் !!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy